## ஒரு பிள்ளையின் கண்ணோட்டங்களும் விருப்ப முன்னுரிமைகளும்

*விவாகரத்துச் சட்டத்துக்கான* மாற்றங்கள் 2021 மார்ச்சு 1 ஆம் திகதி நடைமுறைக்கு வரும். இம்மாற்றங்களிற் சில பெற்றோர் நிலைப் பொறுப்புக்கள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் போது பெற்றோருக்கும், குடும்ப நீதி நிபுணர்களுக்கும் நீதிபதிகளுக்கும் ஒரு பிள்ளையின் கண்ணோட்டங்களையும் விருப்ப முன்னுரிமைகளையும் கருத்திற் கொள்ள உதவும்.

இந்த ஆவணம்:

- உங்களுக்குக் குடும்பச் சட்ட விடயங்களில் பிள்ளைகளிடமிருந்து செவிமடுப்பது ஏன் முக்கியம் என்பதைப் பற்றிய சில பொதுவான தகவல்களை வழங்கும், அத்துடன்
- பிள்ளையின் சிறந்த நலனைத் தீர்மானிப்பதில் ஒரு பிள்ளையின் கண்ணோட்டங்களும் விருப்ப முன்னுரிமைகளும் முக்கியமாகக் கருத்திற் கொள்ளப்பட வேண்டியவை எனும் *விவாகரத்துச் சட்டத்துக்கான* மாற்றங்களை விளங்கிக் கொள்ள உதவும்

### இப்பக்கத்தில்

- **புதிய *விவாகரத்துச் சட்டத்தின்* கீழ் ஒரு பிள்ளையின் கண்ணோட்டங்களும் விருப்ப முன்னுரிமைகளும்**
- **பிள்ளைகளுக்குச் செவிமடுப்பது ஏன் முக்கியம்**
- **பிரிவின் அல்லது விவாகரத்தின் பின்னர் பிள்ளைகளிடமிருந்து செவிமடுக்கும் பல்வேறு வழிகளின் உதாரணங்கள்**
- **உங்கள் மாகாணத்தில் அல்லது ஆட்புலத்திலுள்ள குடும்ப நீதிச் சேவைகள்**

## புதிய *விவாகரத்துச் சட்டத்தின்* கீழ் ஒரு பிள்ளையின் கண்ணோட்டங்களும் விருப்ப முன்னுரிமைகளும்

விவாகரத்தின் பின்னர் பெற்றோர் நிலை தொடர்பான தீர்மானங்கள் ஒரு பிள்ளையின் சிறந்த நலனைக் கருதுவனவாக இருப்பதை உறுதி செய்வது முக்கியம். புதிய *விவாகரத்துச் சட்டம்* உங்கள் குறிப்பான நிலைமையில் உங்கள் பிள்ளைக்கு எது சிறந்ததெனத் தீர்மானிக்க உங்களுக்கும் நீதிமன்றங்களுக்கும் உதவியாகும் காரணிகளின் ஒரு பட்டியலைக் கொண்டுள்ளது.

இக்காரணிகளில் ஒன்று ஒரு பிள்ளையின் கண்ணோட்டங்களும் விருப்ப முன்னுரிமைகளும் ஆகும். ஒரு பிள்ளையின் கண்ணோட்டங்களுக்கும் விருப்ப முன்னுரிமைகளுக்கும் வழங்கப்படும் முக்கியத்துவம் பிள்ளையின் வயதிலும் முதிர்விலும் தங்கியிருக்கும். பிள்ளைகளின் வயது கூடும் போது, பொதுவாக அவர்களின் கண்ணோட்டங்களுக்கும் விருப்ப முன்னுரிமைகளுக்கும் அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகின்றன, ஆனால் ஒவ்வொரு பிள்ளையும் தனிச் சிறப்பானதும் தனது வழியிலேயே விருத்தியடைவதும் உண்டு.

பிள்ளைகள் தாம் எவருடன் வாழ்வரெனத் தீர்மானிக்க – 12 அல்லது 14 என்பது போன்று – குறிப்பான வயது எதுவும் கிடையாது.

ஒவ்வொரு பிள்ளையும் தனிச் சிறப்பானதாவதுடன், அவர்களின் கண்ணோட்டங்கள் ஒரு நீதிபதி எப்பெற்றோர் நிலை ஏற்பாடுகள் அவரது சிறந்த நலன்களில் உள்ளனவெனத் தீர்மானிக்கும் போது கருத்திற் கொள்ளும் ஒரு காரணியும் ஆகும்.

சில வேளைகளில், ஒரு பிள்ளையின் கண்ணோட்டங்களையும் விருப்ப முன்னுரிமைகளையும் கேட்பது செய்ய வேண்டிய சரியான விடயமல்லாதிருக்கலாம், உதாரணமாக அவர்கள் மிக இளம் வயதினராகவும் தமது சொந்தக் கண்ணோட்டங்களை உருவாக்க இயலாமலும் இருந்தால். உங்களுக்கும் அடுத்த பெற்றோருக்கும் அதிகமாக முரண்பாடிருந்தால், உங்கள் பிள்ளைக்கு தனது கண்ணோட்டங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு சமூக சேவகர் போன்ற ஒருவரிடமிருந்து உதவி தேவைப்படலாம்.

பெற்றோர் நிலை ஏற்பாடுகளையும் பிள்ளையின் சிறந்த நலன் காரணிகளையும் பற்றிய மேலதிகத் தகவல்களுக்காக, பாருங்கள்: பிரிவின் அல்லது விவாகரத்தின் பின்னர் பெற்றோர் நிலை ஏற்பாடுகள்.

## பிள்ளைகளுக்குச் செவிமடுப்பது ஏன் முக்கியம்

பிள்ளைகளுக்குத் தம்மைப் பாதிக்கும் எல்லா விடயங்களிலும், விசேடமாக நீதிமன்ற அல்லது நிருவாகச் செயன்முறைகளில் தமது கண்ணோட்டங்களை வெளிப்படுத்த உரிமையுள்ளது. இது 1991 இல் கனடா ஒரு தரப்பாக ஆகிய ஐக்கிய நாடுகள் *சிறுவர் உரிமைகள் ஒப்பந்தத்தில்* வழங்கப்பட்டுள்ளது. எல்லாக் கனேடியச் சிறுவர்களுக்கும் தாம் தமது சொந்தக் கண்ணோட்டங்களை உருவாக்கக் கூடிய வரை இவ்வுரிமையுள்ளது. அவர்ளின் வயதும் முதிர்வும் கூடும் போது அவர்களின் கண்ணோட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்.

பெற்றோர் நிலை தொடர்பாகப் பெற்றோரும் நீதிபதிகளும் மேற்கொள்ளும் தீர்மானங்கள் பிள்ளைகளை நேரடியாகப் பாதிக்கின்றன, பிள்ளைகளுக்கு அத்தீர்மானனங்களைப் பற்றித் தமது கண்ணோட்டங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பிருக்க வேண்டும். பிள்ளைகளுக்கு தமது கண்ணோட்டங்களை வெளிப்படுத்த ஒரு வாய்ப்பிருந்திருந்தால் அவர்கள் தமது பெற்றோரின் பிரிவு தொடர்பிற் சிறப்பாக ஒத்துழைக்கின்றன் என்றும் ஆராய்ச்சி காட்டுகிறது.

சில பிள்ளைகள் தமது பெற்றோரின் பிரிவின் அல்லது விவாகரத்தின் பின்னர் பெற்றோர் நிலை தொடர்பாகக் கருத்துரைக்க விரும்புகின்றனர். சிறுவர்களுடன் அவர்களுக்கு எது முக்கியம் என்பதைப் பற்றி உரையாடுவது பயனுள்ளது. உதாரணமாக, இதில் அவர்களின் அன்றாட வழமைகளும் செயற்பாடுகளும் உள்ளடங்கலாம். உங்கள் பிள்ளைகளிடம் அவர்கள் யாருடன் வாழ விரும்புகின்றனர் என்பது போன்ற அவர்களில் அழுத்தத்தை ஏற்படுத்தும் நேரடிக் கேள்விகளைக் கேட்பதைத் தவிர்ப்பது முக்கியம். இது அவர்கள் உங்களையோ அடுத்த பெற்றோரையோ தெரிவு செய்ய வேண்டுமென அவர்களை உணரச் செய்யலாம்.

அத்துடன், தமது பெற்றோருடனோ வேறெவருடனுமோ தமது கண்ணோட்டங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்பாத சில பிள்ளைகள் இருக்கின்றனர். அதுவும் ஏற்கத் தக்கதே.

பிள்ளைகளிடமிருந்து உள்வாங்கலைப் பெறுவது என்பது நீங்கள் அவர்களிடம் பெற்றோர் நிலை ஏற்பாடுகளைப் பற்றித் தீர்மானங்களை மேற்கொள்ளுமாறு கேட்கிறீர்களென்றோ அவர்கள் பக்கம் சேர வேண்டும் என்று அவர்களுக்குக் கூறுகிறீர்களென்றோ பொருளாகாது. பிள்ளைகள் அவர்களின் கருத்தைக் கூறுவதற்கும் ஒரு தீர்மானத்தை மேற்கொள்வதற்கும் இடையிலான வேறுபாட்டை விளங்கிக் கொள்வது முக்கியம்.

உங்கள் பிள்ளைகளிடம் “நீ யாருடன் வசிக்க விரும்புகிறாய்” என்பது போன்ற கேள்விகளைக் கேட்பதைத் தவிருங்கள்.

இது அவர்களை முரண்பாட்டுக்கு இடையில் போட்டு விடுகிறது.

**பிரிவின் அல்லது விவாகரத்தின் பின்னர் பிள்ளைகளிடமிருந்து செவிமடுக்கும் பல்வேறு வழிகள்**

பிள்ளைகளுக்குச் செவிமடுக்கப் பல வழிகள் உள்ளன. நீங்கள் பெற்றோர் நிலை ஏற்பாடுகளைப் பற்றி எப்படித் தீர்மானங்களை மேற்கொள்ளப் போகிறீர்களாயினும் உங்கள் பிள்ளையின் கண்ணோட்டங்களைப் பெறுவது முக்கியம்.

பெற்றோர் தமது பிள்ளைகள் எப்படி ஈடுபாடாக்கப்படுவார்கள் என்பதைப் பற்றி ஒன்றிணைந்து தீர்மானமெடுப்பது சிறந்தது. நீங்கள் பிரியத் தீர்மானித்த பின்னர் உடனடியாகவே நீங்கள் உங்கள் பிள்ளையின் கண்ணோட்டங்களைக் கேட்கத் தீர்மானிக்கலாம். நீங்கள் பெற்றோர் நிலைப் பிரச்சினைகளைத் தீர்க்கச் செயற்படுகையில் அவர்களின் கண்ணோட்டங்களை ஒரு தடவைக்கு மேல் பெறவும் தீர்மானிக்கலாம். நீங்கள் இணக்கம் செய்தல் போன்ற நீதிமன்றத்துக்கு வெளியிலான ஒரு செயன்முறையில் உங்கள் பிள்ளையைத் தொடர்பாக்கவும் தீர்மானிக்கலாம்.

நீங்கள் நீதிமன்றத்துக்குச் செல்லாமல் உங்கள் பெற்றோர் நிலை ஏற்பாடுகளைச் செய்கிறீர்களாயின் பிள்ளைகளைத் தொடர்பாக்குவதற்கான வழிகளின் சில உதாரணங்கள் இதோ:

- பெற்றோர் (பொதுவாக ஒன்றிணைந்து) பிள்ளைகளிடம் பேசுதல்
- பிள்ளைகள் பிள்ளைகளின் கண்ணோட்டங்களைப் பற்றி அறிக்கையிடப் போகும் ஒரு சமூக சேவகர், உளவியலாளர், அல்லது

உள நல மருத்துவர் போன்ற ஒரு நிபுணரிடம் தமது கண்ணோட்டங்களைப் பகிர்ந்து கொள்ளல்; அத்துடன்/அல்லது

- பிள்ளைகளைத் தொடர்பாக்கும் இணக்க அல்லது ஏனைய குடும்பத் தகராறு தீர்த்தற் செயன்முறைகள், உதாரணமாக உங்கள் நடுவரை உங்கள் பிள்ளையிடம் உரையாடச் செய்து இணக்க அமர்வுகளுக்கு அவர்களின் கண்ணோட்டங்களைத் திரும்பக் கொண்டு வருதல்

நீங்கள் நீதிமன்றத்துக்கு செல்கிறீர்களாயின் பிள்ளைகளைத் தொடர்பாக்குவதற்கான வழிகளின் சில உதாரணங்கள் இதோ:

- ஒரு உள நல நிபுணரால் நடத்தப்படும் சிறுவர் நேர்காணல்கள் உள்ளடங்கும் ஒரு பெற்றோர் நிலைத் திட்டக் கணிப்பீடு
- ஒரு சமூக சேவகர், சட்டத்தரணி அல்லது சிகிச்சையக ஆலோசகர் போன்ற ஒரு தகுதி வாய்ந்த பக்கச் சார்பற்ற மூன்றாந் தரப்பினரால் சிறுவருடன் நடத்தப்படும் ஒரு நேர்காணலின் அல்லது இரு நேர்காணல்களின் அடிப்படையில் பிள்ளையின் கண்ணோட்டங்களைப் பற்றிய ஒரு அறிக்கை
- சிறுவருக்கான ஒரு சட்டத்தரணி, அத்துடன்/அல்லது
- நீதிபதியால் நடத்தப்படும் ஒரு சிறுவர் நேர்காணல்

பெற்றோர் நிலைப் பொறுப்புக்களைப் பற்றித் தீர்மானங்களை மேற்கொண்ட *பின்னர்* பிள்ளைகளுக்குத் தொடர்ந்தும் செவிமடுப்பதும் முக்கியம். ஒரு பிள்ளையின் மீது முரண்பாடு கொண்டுள்ள தாக்கத்தைப் பற்றி எண்ணி, பெற்றோர் நிலைப் பொறுப்புக்களைப் பற்றிய தகராறுகளைச் சமாதானமாகத் தீர்த்துக் கொள்ள முயலுங்கள்.

நீங்கள் நீதிமன்றத்துக்குச் செல்லாமல் ஒரு தீர்மானத்தை மேற்கொண்ட பின்னர் நீங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளக்கூடிய பல வழிகள் இருக்கின்றன. உதாரணமாக, நீங்கள் பெற்றோர் நிலை ஒத்துழைப்பில் பிள்ளைகளை ஈடுபடுத்தலாம், நீங்கள் பெற்றோர் நிலைக் காலத்தை, பெற்றோரின் பொறுப்புக்களை அல்லது பிள்ளைக்கும் பிள்ளையின் வாழ்வில் ஏனைய முக்கிய ஆட்களுக்கும் இடையிலான தொடர்பைப் பற்றி ஒரு இணக்கத்தை அல்லது கட்டளையைச் செய்த பின்னர் ஏற்படும் பெற்றோர் நிலைத் தகராறுகளைத் தீர்க்க பிள்ளையை நோக்காகக் கொண்ட ஒரு செயன்முறை. பெற்றோர் நிலை ஒருங்கிணைப்பாளர்கள் பெற்றோர் நிலை இணக்கமின்மைகளைத் தீர்க்க இணக்கம் காண்பதினதும் நடுவர் தீர்ப்பினதும் ஒரு சேர்க்கையைப் பயன்படுத்தலாம்.

குடும்பத் தகராறு தீர்த்தற் செயன்முறைகளைப் பற்றி மேலும் தகவல்களுக்காக, குடும்பத் தகராறு தீர்த்தல்: நீதிமன்றத்துக்குப் புறம்பே குடும்பச் சட்டப் பிரச்சினைகளைத் தீர்த்தல் - மெய்யறிக்கையில் ஆலோசனை பெறுங்கள்.

பெற்றோருக்கு இக்கடமைகளும் உண்டு:

- அவர்களின் பிள்ளையின் சிறந்த நலன்களைக் கருதித் தீர்மானங்களை மேற்கொள்ளல் (அவர்களுக்குச் செவிமடுப்பது உதவும்), அத்துடன்
- அவர்களின் தகராறுகளில் அவர்களின் பிள்ளைகளை ஈடுபடுத்தாதிருத்தல் (உதாரணமாக, பெற்றோர் குடும்ப நீதிமன்ற நடவடிக்கைகளிற் பயன்படுத்தலாமெனத் தமது பிள்ளையுடனான தமது உரையாடல்களைப் பதிவு செய்யக் கூடாது, அல்லது அடுத்த பெற்றோருக்குத் தகவல்களைக் கொண்டு செல்லுமாறு கூறக் கூடாது)

புதிய *விவாகரத்துச் சட்டத்தின்* கீழ் பெற்றோரின் கடமைகளைப் பற்றி மேலும் தகவல்களுக்காக, பாருங்கள்: https://www.justice.gc.ca/eng/fl-df/pub.html

பிரிவின் அல்லது விவாகரத்தின் பின்னரான பெற்றோர் நிலையைப் பற்றிய தீர்மானங்களில் பிள்ளைகளை ஈடுபடுத்தும் "எல்லோருக்கும் பொருத்தமான ஒரு வழி" கிடையாது. உங்கள் நிலைமையில் உங்கள் பிள்ளைக்கு எது அதிசிறப்பாகச் செயற்படும் என்பதைப் பற்றிச் சிந்திப்பது முக்கியம்.

## உங்கள் மாகாணத்திலுள்ள குடும்ப நீதிச் சேவைகள்

குடும்ப நீதிச் சேவைகள் என்பவை மக்களுக்கு பிரிவில் அல்லது விவாகரத்தில் இருந்து ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிக்க உதவும் நோக்கிலான அரசாங்க அல்லது தனியார் சேவைகளாகும்.

மாகாணங்களும் ஆட்புலங்களும் பிள்ளைகளின் கண்ணோட்டங்களைச் செவிமடுப்பது தொடர்பான குடும்ப நீதிச் சேவைகளையும் நீங்கள் மிகப் பயனுள்ளவையாகக் காணக்கூடிய இணக்கமாக்கல், பெற்றோர் நிலைத் தகவல் அமர்வுகள் போன்ற சேவைகளையும் கொண்டிருக்கின்றன. நீங்கள் உங்கள் மாகாண அல்லது ஆட்புல அரசாங்கத்தின் வலைத்தளத்தில் ஏனைய பயனுள்ள சேவைகளையும் கண்டு கொள்ளலாம். புதிய *விவாகரத்துச் சட்டத்தின்* கீழ், சட்ட ஆலோசகர்கள் தமது சேவை

பெறுநர்களுக்கு உதவக்கூடிய எவையேனும் குடும்ப நீதிச் சேவைகளைப் பற்றி அவர்களுக்கு உதவ வேண்டிய ஒரு கடமை இருக்கிறது.

**தொடர்புள்ள தொடுப்புக்கள்**

- பிரிவின் அல்லது விவாகரத்தின் பின்னர் பெற்றோர் நிலை ஏற்பாடுகள்
- திட்டங்களை ஏற்படுத்துதல்:பிரிவின் அல்லது விவாகரத்தின் பின்னர் பெற்றோர் நிலை ஏற்பாடுகளுக்கான ஒரு வழிகாட்டல்
- பெற்றோர் நிலைத் திட்டமிடல் சரிபார்ப்புப் பட்டியல்
- வாழ்க்கை முன்னகர்வதால் . . . பிரிவுடனும் விவாகரத்துடனும் வாழச் சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் உதவுதல்
- குடும்பத் தகராறு தீர்த்தல்: நீதிமன்றத்துக்குப் புறம்பே குடும்பச் சட்டப் பிரச்சினைகளைத் தீர்த்தல்
- விவாகரத்தும் குடும்ப வன்முறையும்